DVC. No.12/2022.

**ம.சா.1 மாலதி,** **27.09.2022.**

**1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி :–**

28.01.2022ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினாரா என்றால் ஆமாம். இந்த வழக்கில் தாக்கல் செய்த எதிருரையின் அம்சத்தை தான் அந்த அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். பதில் அறிவிப்பை 15.02.2022ம் தேதி அனுப்பினேனா என்றால் இல்லை. 14.02.2022ம் தேதி அனுப்பினேன். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் வழக்கறிஞர் கையொப்பத்தின் கீழ் 15.02.2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பதில் அறிவிப்பை தயார் செய்தது 14.02.2022. பதில் அறிவிப்பை தயார் செய்தது எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். 09.05.2011ம் தேதி ரூ.19,00,000/– பணத்தை என் கணவரிடம் உங்கள் கட்சிகாரர் கொடுத்ததாக சொல்லியிருப்பது பொய் என்று என் பதில் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் 2016ம் வருடம்தான் பணம் கொடுத்தார்கள். அதை மறைப்பதற்காக தான் பொய்யாக அவ்வாறு சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை. பணம் என்னிடம் கொடுக்கவில்லை. 10.01.2022ம் தேதி என்னை என் தாயார் வீட்டுக்கு அழைத்து சென்று சம்பிரதாயப்படி திருப்பி கொண்டுவந்து விடும்போது புன்னியதானம் செய்திருந்தார்கள் என்ற விவரத்தை பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பதில் அறிவிப்பில் மேற்படி விவரத்தை சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பதில் அறிவிப்பில் சீர்வரிசை பொருட்களின் மதிப்பு ரூ.75,000/– என்றும் மனுவில் ரூபாய் 1,00,000/– என்றும் முன்னுக்கு பின்னுக்கு முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பெருட்களை நான் என் வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டதால் பொருட்களின் மதிப்பு தெரியவில்லை என்றால் சரியல்ல. பொருட்கள் எல்லாம் அங்கேதான் இருக்கிறது. 20.02.2022ம் தேதி எதிர்மனுதாரர் வீட்டுக்கு சிவகுரு மற்றும் ரவிசந்திரனை அழைத்து சென்றதை

நிரூபிக்க அவர்களை சாட்சியாக விசாரிக்கின்றேனா என்றால் விசாரிக்கின்றேன். பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் குடும்பம் சட்டவிரோதமான குடும்பம் என்று சொல்லியுள்ளேன். எந்த விதத்தில் சட்டவிரோதமான குடும்பம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சட்டவிரோதமான மதுவிற்பனை செய்யும் குடும்பம் என்று சொல்லியுள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பக்கத்தில் இரண்டாவது பாராவில்சட்டவிரோதமான மதுவிற்பனை செய்யும் குடும்பம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதுமாதிரி எந்த விவரமும் இல்லை என்றால் சரியல்ல. 4 வது எதிர்மனுதாரர் தான் தோன்றிதனமாக வாழ்ந்து வருகிறார் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 4 வது எதிர்மனுதாரர் எந்த வீட்டில் வசிக்கிறார் என்றால் நாங்கள் இருந்த பெண்ணகோணம் வீட்டில் தான் இருப்பார். இரவு படுப்பது மட்டும்தான் இன்னொருவீட்டில் போய் படுப்பார். நாங்கள் இருந்த பெண்ணகோணம் வீட்டில் தான் இருப்பார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் தங்கி இருந்த வீட்டில்தான் சட்டவிரோதமாக மதுவிற்பனை செய்தார்களா என்றால் அந்த வீட்டில் பாட்டில் அடுக்கி வைப்பார்கள் ரோடு சைடு உள்ள வீட்டில் விற்பார்கள். பதில் அறிவிப்பு மற்றும் மனுவில் நான் தங்கியிருந்த வீட்டில் பாட்டில் அடுக்கி வைப்பார்கள் என்றும் 4 வது எதிர்மனுதாரர் அங்குதான் இருந்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பதில் அறிவிப்பு மற்றும் மனுவில் நான் நிச்சயமாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த வீட்டை விட்டு வெளியேறி 6 வருசம் இருக்குமா என்றால் இல்லை 4 வருடம் இருக்கும். நான் வீட்டை விட்டு வெளியேறி நாலுவருடம் இருக்கும் என்பதற்கான காரணத்தை பதில் அறிவிப்பு மற்றும் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லியிருந்தால் எதிர்மனுதாரர் கொடுத்த அறிவிப்பு மற்றும் நான் அளித்த பதில் அறிவிப்பு ஆகியவற்றை ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றால் நான் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேன். நான் மனு அளித்தபிறகு எதிர்மனுதார்கள் தாக்கல் செய்த எதிருரையை படித்துவிட்டு அதற்கு போட்டியாக தற்போது மேற்படி விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேன். 3,4 எதிர்மனுதார்கள் எப்போதும் என் பேச்சுக்கு வந்தததில்லை என்றால் சரியல்ல. சொத்துக்கள் அனைத்தும் 1ம் எதிர்மனுதாரர்

சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் எங்கள் திருமணத்திற்கு முன்பு இருந்தே அந்த சொத்துக்கள் இருந்தது. அதை எவ்வாறு சம்பாதித்தார்கள் என்று எனக்கு தெரியாது. சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போது அந்த சொத்துக்களை குறித்து வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அப்போதுதாவது அந்த சொத்துக்கள் சுயமாக சம்பாதித்த சொத்தா அல்லது பூர்விக சொத்தா என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது. சொத்து பற்றி விவரம் எதுவும் தெரியாமல் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரிந்துதான் தாக்கல் செய்தேன். என் கணவர் வெளிநாட்டில் இருந்தார். சொத்துக்கள் மாமனார் பெயரில்தான் வாங்கினார். சொத்துக்கள் 40 வருடத்திற்கு முன்பு வாங்கியது. என் கணவர் 40 வருடத்திற்கு முன்பு வெளிநாட்டில் இருந்ததரா என்றால் இல்லை. என் கணவர் தான் சட்டவிரோத மது விற்பணையாளர் என்றால் இல்லை. மது பெட்டி எடுத்துவரும்போது தான் அவர்க்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நானும் என் கணவரும் தனிகுடித்தனம் போவதற்காக சொத்துக்களை விற்று தரசொல்லி 19,00,000/- பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. பெண்ணகோணத்தை சேர்ந்த அரசன் என்பவர்தான் பஞ்சாயத்து பேசி 3ம் எதிர்மனுதாரருக்கு பெண்ணகோணம் வீட்டையும் 2 ஏக்கர் நிலத்தையும் பாகம் பிரித்து அவருக்கு கொடுக்கவேண்டும் என்றால் 1,00,000/- எழுத்து தொகை வேண்டும் என்று 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில்தான் 1ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு அந்த சொத்தை எழுதி கொடுத்தார் என்றால் இல்லை. நான் 19,00,000/- பெற்றுக்கொண்டு பெரம்பலூர் நான்குரோடு, லப்பைகுடிக்காடு, சின்னாறு பகுதிகளில் வட்டிக்கு விடுகிறேன் என்றால் இல்லை. 1,2 எதிர்மனுதார்கள் எங்களுக்கு தேவையான பாகத்தை பிரித்து கொடுத்து 3ம் எதிர்மனுதாரருக்கு பாகத்தை பிரித்துகொடுத்து விட்டார்கள். அவர்களிடம் எதுவும் இல்லை என்றால் என் கணவர் இறந்து 1 மாதத்திற்குள் என்னை ஏமாற்றவேண்டும் என்பதற்காக மாற்றி எழுதிக்கொண்டார்கள். 24.09.2021ம் தேதி 3ம் எதிர்மனுதாரர் தனது பாகத்தை விடாமல் தடுக்கிறோம் என்று என் கணவருக்கு நோட்டீஸ் அனுப்பினார் என்றால் இல்லை. என் கணவர் சட்டப்படிப்பு படித்தவர் என்றால் படித்துக்கொண்டு இருந்தார். என் கணவர் சட்டப்படிப்பு படித்துக்கொண்டு இருந்தார் என்று மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என் கணவர் சட்டப்படிப்பு படிப்பதற்கான செலவு 1ம் எதிர்மனுதாரர்தான் செய்தார் என்றால் இல்லை. எதை வைத்து சட்டப்படிப்பு படித்தார் என்றால் அவர் வேலைக்கு செல்வார். வண்டி வாங்கி விற்பார். வண்டி ஏதாவது மாட்டிக்கொண்டது என்று யாராவது போன் செய்தால் என் கணவர் போலீஸ் ஸ்டேசனுக்கு சென்று உதவி செய்வார். அதற்கு அவருக்கு பேமண்டு வரும். சட்டப்படிப்பு போவதற்கு முன்பு இந்த வேலை செய்தாரா என்றால் இல்லை. என் கணவர் சட்டவிரோதம் மதுவிற்பனை செய்த இடத்தில் என் கணவருக்கும் ஒரு நபருக்கு சண்டை நடந்து அதில் என் கணவருக்கு கண்ணில் அடிப்பட்டது என்றால் சண்டை என் கணவருடன் நடக்கவில்லை. ஒரு நபர் என் கணவரின் அப்பாவுடன் சண்டை போட்டபோது என் கணவர் சென்று கேட்டார். அப்போது அந்த நபர் போதையில் கீழே கிடந்த கல்லை எடுத்து என் கணவரை அடித்துவிட்டார். நாங்கள் நாலுரோட்டில் குடியிருக்கும்போது என் கணவருக்கு அங்கு என்ன வேலை என்றால் அவர் அங்கே போவார். சட்டவிரோத மதுவிற்பனை செய்ததால்தான் அங்கு போவார் என்றால் அதற்காக அங்கு அவர் போகமாட்டார். கண்ணை சரிசெய்வதற்கான மதுரை கண்மருத்துவமனையில் ஆன செலவை 1ம் எதிர்மனுதாரர்தான் செய்தார் என்றால் இல்லை. அந்த செலவை நாங்களோ பார்த்துக்கொண்டோமா என்றால் ஆமாம். ஆனால் மதுரையில் அட்மிட் ஆகவில்லை தனலெட்சுமி மருத்துவகல்லூரியில் பார்த்துக்கொண்டோம். என் கணவர் சட்டவிரோதமான மதுவிற்பனை கட்ட பஞ்சாயத்து செய்து கொண்டுயிருந்தார். அதனால் 3ம் எதிர்மனுதாரருக்கு வரவேண்டிய பாகத்தை தடுத்துக்கொண்டு இருந்தார் என்றால் இல்லை. என் கணவர் உயிருடன் இருந்தவரை 3ம் எதிர்மனுதாரர் ஊருக்குள் வரமுடியாது என்றால் ஊருக்குள்தான் இருந்தார். நான் நாலுரோட்டில் குடியிருந்தாலும் இந்த விசயம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். என் கணவர் சட்டம் படித்ததால் ஏற்கனவே அவருக்கு சேரவேண்டிய பாகத்தை வாங்கிகொண்டு நாலுரோட்டில் நாங்கள் குடியிருந்தோம் என்றால் என் கணவர் குடிக்கு அடிமையாக இருந்ததால் எதிர்மனுதார்கள் தான் காட்டை எழுதி வாங்கிகொண்டார்கள். 3ம் எதிர்மனுதாரருக்கும் என் கணவருக்கும் ஆளுக்கு ஒரு ஏக்கர் நிலம் விட்டு இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த நிலத்தை தான் என் கணவர் விற்றார் என்றால் இல்லை. என் மாமனார் பெயருக்கு மீண்டும் எழுதி வாங்கிகொண்டார்கள். கண் மருத்துவத்திற்கு ஆன செலவிற்குதான் நாங்கள் அந்த

நிலத்தை விற்றோம் என்றால் என் கணவருக்கு அடிப்பட்டது 2017 இவர்கள் எழுதி வாங்கியது 2021. நான் குறிப்பிட்ட வருடம் தவறு என்றால் சரியல்ல. எங்களுக்கு சேர வேண்டிய பங்கிற்கு ரூ.19,00,000/- பெற்றுக்கொண்டு தனிகுடித்தனம் வந்துவிட்டோம். வீட்டை விட்டு 4 வருடம் ஆகிவிட்டது என்று நானே சொல்லியுள்ளபோது நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் பங்கு பிரிக்கவும் இல்லை. பணம் தரவும் இல்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு 88 வயதாகிறது. எனக்கு அவர் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியது அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் அவருக்குரிய பாகத்தில் தான் குடியிருக்கிறார் என்றால் இல்லை. 4ம் எதிர்மனுதாரர் அவர் வீட்டில்தான் இருக்கிறார் என்றால் இல்லை பெண்ணகோணத்தில் இருக்கிறார். பெண்ணகோணத்தில் அவருக்குகென்று உள்ள தனிவீட்டில் இருக்கிறார் என்றால் இல்லை. நான் சொல்லும் வீட்டில்தான் குடியிருக்கிறார் என்பதை நிரூபிக்கிறீர்களா என்றால் ஆமாம். நான்கு சக்கர வாகனம் மற்றும் பணம் 19,00,000/- வைத்துக்கொண்டு இந்த DVC சட்டத்தை தவறாக பயன்படுத்தி எதிர்மனுதார் மீது இந்த பொய்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வண்டி எல்லாம் அவர்களிடம் தான் இருக்கிறது. கடைசியாக என் கணவர் குடியிருந்த வீட்டில் பரிகாரம் கேட்டுள்ளேன். நான் வருடத்திற்கு முன்பே அந்த வீட்டில் இருந்து வெளியேறிவிட்டேன். அதனால் அந்த பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மனுவிற்காக சீர்வரிசை ரசீது மற்றும் நகை ரசீது தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனுதள்ளுபடி செய்யபடவேண்டியது என்றால் சரியல்ல.